# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10786/விசாரணை/E/2022 (W.P.(MD) No.2255/2025)**

திரு.M.ஜெயமணி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்ட அலுவலகம், சிவகாசி, விருதுநகர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P.(MD)No.2255 of 2025 என்ற வழக்கின் மீது பிறப்பித்துள்ள உத்தரவினையடுத்து, இவ்வாணையத்தால் 18.06.2025 அன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்றைய தின விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு.M.ஜெயமணி ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலர் நேரில் ஆஜரானார்.

2. பொதுத் தகவல் அலுவலர் எடுத்துரைத்த வாதங்கள் மற்றும் சமர்ப்பித்த அறிக்கைகள் மற்றும் மேல்முறையீட்டாளரின் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(3) மனுக்கள் உள்ளிட்ட ஆணையத்தின் ஆவணங்களை பரிசீலனை செய்த பின்பாக, 18.06.2025 அன்று கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

*12(1). இவ்வாணை கிடைக்கப் பெற்ற உடன், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள்,*

*(அ) (i) மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் எந்தெந்த அலுவலகங்களில் பராமரிக்கப்படக்கூடியவை, எவ்வாறு பராமரிக்கப்படக்கூடியவை, அவை தனித்தனி கோப்புகளாக பராமரிக்கப்பட வேண்டியவையா, ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்கள் அடங்கிய ஆவணம்/பதிவேடாக பராமரிக்கப்பட வேண்டியவையா, இல்லையா என்பது குறித்தும்,*

*(ii) இன்றைய விசாரணையில் ஆஜரான சாத்தூர் வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர்/பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளவாறு, MRI பதிவேடு என்பது மேல்முறையீட்டாளர் கோரும் தகவல் அடங்கிய ஆவணமா, அவை எந்தெந்த அலுவலகங்களில் பராமரிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும்,*

*(இ) அவ்வாறு மேற்குறித்த ஆ(i) & (ii)-ல் குறிப்பிட்ட ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியவை எனும்பட்சத்தில், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டாளர் அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் சிவகாசி வருவாய் கோட்ட அலுவலகங்களில் அதனை எடுத்து வைத்திட அறிவுறுத்திடவும்*

*(ஈ) அவ்வாறான ஆவணங்களில் உள்ள விபரங்களை பரிசீலித்த பின்பாக மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழ் வழங்கக்கூடியவையா என்பதை விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் முடிவு செய்து,*

*(i) தகவல் பெறும் உரிமைச் சட்ட விதிகளின்படி வழங்கப்படக்கூடிய தகவல்கள் எனும்பட்சத்தில், அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் சிவகாசி வருவாய் கோட்ட அலுவலகங்களில் மேல்முறையீட்டாளருக்கு வெவ்வேறு தினங்களை குறிப்பிட்டு அவ்வாறு சேகரித்து வைக்கப்பட்ட ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கி, மேல்முறையீட்டாளர் ஆவணங்களை ஆய்வு செய்வதை புகைப்பட/வீடியோ எடுத்து, அவர் ஆவணங்களை பார்வையிட்ட பின்பாக அவர் கோரும் ஆவண நகல்கள் பற்றிய விபரங்களை மேல்முறையீட்டாளரிடமிருந்து எழுதி பெற்ற பின்பாக,*

*(ii) மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் வழங்கப்படக்கூடிய தகவல்கள் எனில், அவற்றை மேல்முறையீட்டாளருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிடவும்,*

*(iii) மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் வழங்கப்படக்கூடியவை அல்ல எனில், அது குறித்த விபரத்தை மேல்முறையீட்டாளருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிடவும்,*

*(எ) அவ்வாறு மேல்முறையீட்டாளர் கோரிய ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியதில்லை எனும்பட்சத்தில், அது குறித்த தகவலை மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் அனுப்பி வைத்திடவும்,*

*மேற்கூறிய நடவடிக்கை சம்பந்தப்பட்ட அறிக்கைகளை மேல்முறையீட்டாளர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபர அறிக்கையை இவ்வாணையத்தில் 03.07.2025 அன்று விசாரணையில் இன்று ஆஜரான மூன்று வருவாய் கோட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர்கள் மூலமாக ஆணையத்தில் நேரில் சமர்ப்பித்திட விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

*(2) மூன்று வருவாய் கோட்ட அலுவலகங்களிலும் மேல்முறையீட்டாளர் தகவல் கோரும் ஆவணம் பராமரிக்கப்பட வேண்டியவை, ஆனால் பராமரிக்கப்படவில்லை அல்லது கிடைக்கப் பெறவில்லை எனும்பட்சத்தில், மேற்படி ஆவணங்கள் பராமரிக்கப்படாததற்கு/கிடைக்கப் பெறாததற்கு யார் பொறுப்பு என்பதை கண்டறிந்து, அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்க அவரது உயரதிகாரிக்கு உத்தரவிடக்கூடாது என்பதற்கான எழுத்துமூலமான*

*விளக்கத்தினை அவர்களிடமிருந்து பெற்று, அது குறித்த அறிக்கையை 03.07.2025 அன்று விசாரணையில் இன்று ஆஜரான மூன்று வருவாய் கோட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர்கள் மூலமாக ஆணையத்தில் நேரில் சமர்ப்பித்திட விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

*மூன்று வருவாய் கோட்ட பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து அறிக்கைகளை பெற்று விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு ஒருங்கிணைத்து அறிக்கையினை அனுப்ப வேண்டும். அதேபோன்று, இவ்வாணையத்திற்கும், விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர்/ மேல்முறையீட்டு அலுவலர், அனைத்து விபரங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையாக அனுப்ப வேண்டும் என்று இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

*(3) மேல்முறையீட்டாளர் விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து தகவல் பெறப்பட்ட பின்பாக, அது குறித்து ஏதும் தெரிவிக்க விரும்பும்பட்சத்தில், அவர்தம் கருத்தினையும், மீண்டும் விசாரணையில் பங்கேற்க விரும்பினால், அது குறித்தும் 18.07.2025-க்குள் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு மேல்முறையீட்டாளருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

3. இவ்வாணையத்தின் 18.06.2025 தேதியிட்ட உத்தரவிற்கிணங்க, அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்கள் மற்றும் சிவகாசி சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஆகியோர் 03.07.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜரானார்கள். விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட ஒருங்கிணைந்த அறிக்கை 03.07.2025 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் மேற்குறித்த தனது அறிக்கையில், சிவகாசி சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் 26.06.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 30.06.2025 அன்று தங்கள் பொது அதிகார அமைப்பிலும், அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் 24.06.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 27.06.2025 அன்று தங்கள் பொது அதிகார அமைப்பிலும் மற்றும் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் 24.06.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 27.06.2025 அன்று தங்கள் பொது அதிகார அமைப்பிலும் மேல்முறையீட்டாளரை நேரில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கியதாகவும், ஆனால் மேல்முறையீட்டாளர் ஆவணங்களை பார்வையிட வரவில்லை என்பதால் மேல்முறையீட்டாளரை அலைபேசியில் தொடர்புக் கொண்டு பதிவேடுகளை பார்வையிட வர இயலுமா எனக் கோரப்பட்டதில், தான் பார்வையிட வரவில்லை என்று தெரிவித்துள்ளதாக எடுத்துரைத்துள்ளார். மேலும், அரசாணை நிலை எண்.34, வருவாய்த் துறை (LR.I(2)) நாள் 14.01.2025-ன்படி முன்னர் திருநெல்வேலி உதவி ஆணையர்(நிலச்சீர்திருத்தம்) அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பதிவேடுகள் மற்றம் கோப்புகள் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், அவற்றிலிருந்து ஏதேனும் தகவல்கள் கோரும்பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கு வழங்க தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்குறித்த மாவட்ட வருவாய் அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட அறிக்கையின் நகல் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட அறிக்கையினை பெற்ற பின்பாக, மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்திற்கு 08.07.2025 தேதியிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார் :

> "I filed a contempt petition in High Court, Madurai Branch No. CONT.P(MD) 1487/2025, against the Tamil Nadu Information Commission; the next hearing is to be held in the court on 18.07.2025. I request you to give time till the case is disposed of to give my comments, if so, on the letter dated 02.07.2025 received from the appellate authority".

இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. ஆகவே, மேல்முறையீட்டாளர் கோரியவாறு 18.07.2025-க்கு பின்பாக, விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரின் 02.07.2025 தேதியிட்ட அறிக்கை குறித்து ஏதும் தெரிவிக்க விரும்பினால் அதனை 04.08.2025-க்குள் பதிவஞ்சலில் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இவ்வாணையம் மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடுகிறது.

6. இவ்வழக்கில் 04.08.2025-க்கு பின்பாக உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

**ஆணை நாள் : 11.07.2025**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10786/விசாரணை/E/2022 (W.P.(MD) No.2255/2025)**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/
மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சாத்தூர், விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிவகாசி, விருதுநகர் மாவட்டம். **(ஒப்புகை அட்டையுன் கூடிய பதிவஞ்சலில்)**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35. **(W.P.(MD) No.2255/2025 - தொடர்பாக)**

திரு.M.ஜெயமணி
3/26-1 தெற்கு தெரு, வலையபட்டி,
வெம்பக்கோட்டை வட்டம்,
விருதுநகர் மாவட்டம்-626 127. **(BY RPAD)**

Copy to: File

RJ/PS 11.07